IN THE COURT OF DISTRICT MUNSIF, GUDIYATTAM, VELLORE DISTRICT.

**OS.No. 78/2020**

| DEPOSITION OF WITNESS | PW.2 |
|---|---|

| NAME | வேல்முருகன் |
|---|---|

Solemnly affirmed in accordance with the provisions Act of 1873 on the day of 06.07.2023

பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை

1.இந்த வழக்கு மாயவேல் தாக்கல் செய்துள்ளார். மாயவேல் தந்தையும் எனது தந்தையும் அண்ணன் தம்பிகள் என்றால் சரிதான். நானும் வாதி மாயவேலும் அண்ணன் தம்பி உறவு முறைகள். எனது தந்தையும் வாதி மாயவேல் தந்தையும் கூட்டு குடும்பமாக எத்தனை ஆண்டுகளாக வாழ்ந்தார்கள் என்று தெரியாது.

2.நான் மேஸ்திரி வேலை செய்து வருகிறேன். நான் கட்டிட ஒப்பந்ததாரராக 36 ஆண்டுகளாக உள்ளேன். நான் அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்ததாரர் என்றால் இல்லை. நான் வருமான வரி கட்டுவதில்லை. நான் மொத்தமாகவும் கட்டிடம் கட்டி தர ஒப்பம் செய்வதும் உண்டு. கூலிக்கு மட்டும் ஒப்பந்தம் செய்வதும் உண்டு நான் பொறியாளருக்காக வேலை செய்து வருகிறேன்.

3.பொறியாளர் ஒப்பந்தம் போடுவார் அவருக்கு அதற்கு கீழ் ஒப்பந்தம் போட்டு வேலை செய்வது வழக்கம். நான் எத்தனை ஆண்டுகளாக எந்த எந்த தேதியில் எந்த வருடத்தில் ஒப்பந்த வேலை செய்து வந்தேன் என்று தற்போது ஞாபகம் இல்லை. 23.11.2001 அன்று வெள்ளிக்கிழமையிடம் மாயவேலிடம் ஒப்பந்தம் செய்யப்பட்டது. மாயவேலின் தந்தை அப்போது உயிருடன் இல்லை. அவர் அதற்கு முன்பே இறந்து விட்டார்.

4.சுப்பிரமணி என்ற சிற்பியிடம் நான் துணை ஒப்பந்தம் செய்தேன். தாவா கோயிலை கட்டுவதற்கு சிற்பி சுப்பிரமணி ஒப்பந்தம் செய்து அதில் கோவில் கட்டிடம் கட்டுவதற்கு மட்டும் என்னிடம் துணை ஒப்பந்தம் போடப்பட்டு மாயவேலிடம் ஒப்பந்தம் போடப்பட்டது. சுப்பிரமணி சிற்பி ஒப்பந்தத்தை பேசிவிட்டு மாயவேலிடம் ஒப்பந்தம் போடப்பட்டது.

5.எனது முதல் விசாரணையில் சிற்பி சுப்பிரமணியிடம் ஒப்பந்தம் போடப்பட்டதாக எதுவும் கூறவில்லை என்றால் சரியல்ல. எந்த சர்வே எண்ணில் கட்டிடம் கட்டுவதற்கு ஒப்பந்தம் போடப்பட்டது என்ற விவரம் எனக்கு தெரியாது. 28 க்கு 36 அளவுள்ள கட்டிடம் கட்டுவதற்கு ஒப்பந்தம் போடப்பட்டது. ஒருவர் கட்டிடம் கட்ட வேண்டும் என்றால் அந்த இடத்திற்கு உரிமையளாராக இருக்க வேண்டும் என்றால் சரிதான் அந்த கோயிலுக்கு சொந்தக்காரர் மாயவேல் என்று கூறினார்கள். ஆவணங்களை நான்

பார்க்கவில்லை மாயவேலுக்கு தான் சொந்தம் என்று கூறினார்கள்.

6.ஒப்பந்தம் போடுவதற்காக என்னை அழைத்தார்கள் எங்கு பத்திரம் வாங்கினார்கள் யார் பெயரில் பத்திரம் வாங்கினார்கள் எந்த தேதியில் வாங்கினார்கள் என்று தெரியாது. அதில் படித்து காண்பித்தார்கள் அதன் பிறகு நான் கையொப்பம் இட்டேன். அந்த ஒப்பந்த பத்திரத்தில் ஒப்பந்த தேதியில் 2 லட்சம் கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளது. ரூப் கான்கிரீட் போடும் போது 1 1/2 லட்சம் கொடுத்தார்கள் அதற்கு எந்த செல்லும் வைக்கவில்லை. வேலை முடித்த பின்பு மீதி 2 லட்சத்தை வாங்கியதற்கு செல்வைக்கவில்லை.

7.நான் வாங்கிய பணத்திற்காக விவரங்களை தனியாக நோட்டில் எழுதி வைத்துள்ளனர். நான் சொல்வது போல் எழுதி வைத்திருந்தால் அந்த நோட்டை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றாலும் இந்த வழக்கிற்காக ஒப்பந்த பத்திரத்தை தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 2001 ல் 60 ஆயிரத்திற்கு மேல் வருமானம் வருபவர்க்ள வருமான வரி கட்ட வேண்டும் என்பதால் அப்பொழுதே 6 லட்சத்திற்கு ஒப்பந்தம் போடப்பட்டதை வருமான வரி கணக்கில் காண்பித்திருக்க வேண்டும் என்பதால் அது போல் ஒரு ஒப்பந்தம் போடப்படவில்லை என்றால் சரியல்ல.

8.நானும் வாதி மாயவேலும் அண்ணன் தம்பி என்பதால் இவ்வழக்கிற்காக தயார் செய்யப்பட்ட பத்திரம் என்றால் சரியல்ல. கட்டுமான தொழிலாளர் நல வாரியத்தில் ஒருவர் பதிவு செய்திருந்தார் அவரின் புகைப்படத்தை ஒட்டிதான் பதிவு அட்டை கொடுப்பார்கள் என்றால் அப்பொழுது கொடுப்பதில்லை. நான் இப்பொழுது மீண்டும் புதுப்பிப்பதற்க கொடுத்துள்ளேன். ஒவ்வொரு வருடமும் கட்டுமான தொழிலாளர் நல வாரியத்தில் சந்தா செலுத்தி புதுப்பிக்க வேண்டும் என்றால் சரிதான்.

9.நான் அது போல் பணம் செலுத்திய ரசீது நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.18 1986 ல் கொடுக்கப்பட்டது. அடையாள அட்டையில் ஒவ்வொரு ஆணடும் புதுப்பிதற்கான முத்திரை போடப்பட்டு புதுப்பிக்கப்படும் என்றால் சரிதான். நல வாரியத்தில் ஒருவர் புதுப்பிக்காமல் இருந்தால் அவர் அதில் இல்லாமல் இருக்க வேண்டும் அல்லது இறந்திருக்க வேண்டும் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த வா.சா.ஆ.18 ல் புதுப்பிதற்கான முத்திரை உள்ளதா என்றால் இல்லை.

10.வா.சா.ஆ.18 உள்ள கையெழுத்தும் எனது முதல் விசாரணை வாக்கு மூலத்தில் உள்ள கையெழுத்தும் வித்தியாசப்பட்டுள்ள உள்ளது என்றால் சரிதான். எனக்கு கையில் அடிப்பட்டதால் அப்படி கையொப்பம் இட்டுள்ளேன். இரண்டும் எனது கையெழுத்தும் எனது தான். நான் மேஸ்திரி வேலை செய்யவில்லை என்றாலும் எனக்கு மேஸ்திரி வேலை தெரியாது என்றாலும் போலியாக வா.சா.ஆ.18 தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் ஒப்பந்தம் போடவில்லை கட்டிடம் கட்டித்தரவில்லை என்றால் சரியல்ல. 2001 ல் கோவில் நிர்வாகத்திடம் 6 லட்சம் அவர்கள் கைவசம் இல்லை என்றால் சரியல்ல. என்னுடைய சகோதரர்

என்பதால் அவருக்கு பவ்வியப்பட்டு சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் எனது சாட்சியம் ஏற்றுக் கொள்ளக் கூடாது என்றாலும் சரியல்ல.

Taken down by me in open court read over of the deponent and acknowledged by her/him to be correct.

Sd/.M.N.Rajananhivarmasiva,
District Munsif,
Gudiyattam.